(3)

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075265
C

1. District : மாவட்டம் திருவாரூர் PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 04/2021 Date: நாள் 08.04.2021

2. (i) Act சட்டம்: 120(B), 409, 420, 465, 468, 471 IPC and 13(2) R/W Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 13(1)(c), 13(1)(d) of Prevention corruption Act- Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 1988 as amended 2018 and 109 IPC Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2013 முதல் Date to : நாள் வரை 2018 வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.04.2021 Time : நேரம் 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In the outcome of vigilance Report.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி புதிய பேருந்து நிலையம், திருவாரூர் 1½ KM கிழக்கே
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B.V. நந்தகோபால் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி காவல் துணை கண்காணிப்பாளர், V & AC, திருவாரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

எதிரிகள் விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளராகிய நான் 08.04.2021ஆம் தேதி 15.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரகத்தின் நமுனா VR.No.47837/2019/LB/TVR Dt:10.02.2021-ன் படி இயக்குனரகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற மேற்படி விழிப்பு அறிக்கையினை பார்வையிட்டு, பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு.

<u>எதிரிகள் விபரம்:</u>

A1) திரு. R.தர்மலிங்கம், த/பெ ராமசாமி, முன்னாள் நகராட்சி பொறியாளர் (பொறுப்பு) முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்,

A2) திருமதி.K.உமாமகேஸ்வரி, க/பெ. கண்ணன், முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

08/4/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V.நந்தகோபால்
Rank: நிலை DSP ......No. எண் ..........
V&AC, திருவாரூர்

A3) திரு V.பாலகங்காதரன், த/பெ. வைத்தியநாதன், முன்னாள் நகராட்சி பொறியாளர் (பொறுப்பு) முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A4) திரு P.ஜோதிமணி, த/பெ. பிச்சைப்பிள்ளை, முன்னாள் நகராட்சி பொறியாளர், திருவாரூர்,

A5) திரு.M. காந்திராஜ், த/பெ. S.முத்தையன், முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்,

A6) திரு.வெங்கடேசன், பணி கள மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், திருவாரூர்,

A7) திரு.நாகராஜன், பணி கள மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், திருவாரூர்

A8) திரு.D.முருகவேல், ஒப்பந்ததாரர், 166 ஹரேராம் நகர், திருவள்ளூர், சென்னை.

A1) திரு.R. தர்மலிங்கம், த/பெ ராமசாமி என்பவர் திருவாரூர் நகராட்சியில் நகராட்சி பொறியாளராக 23.05.2013 முதல் 11.02.2014 வரையிலும், பொறுப்பு ஆணையராக கடந்த 17.10.2014 முதல் 29.02.2016 வரையிலும் A2) திருமதி.K.உமாமகேஸ்வரி, க/பெ. கண்ணன் என்பவர் திருவாரூர் நகராட்சியில் ஆணையராக கடந்த 12.02.2014 முதல் 29.09.2014 வரையிலும், 09.09.2018 முதல் 08.03.2019 வரை கும்பகோணம் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) திருவாரூர் நகராட்சி ஆணையராகவும், A3) திரு V.பாலகங்காதரன், த/பெ. வைத்தியநாதன், என்பவர் திருவாரூர் நகராட்சியில் பொறியாளராக கடந்த 29.02.2016 முதல் 22.08.2016 வரையிலும், பொறுப்பு ஆணையராக கடந்த 03.10.2016 முதல் 10.03.2017 வரையிலும், A4) திருP.ஜோதிமணி, த/பெ. பிச்சைப்பிள்ளை, என்பவர் திருவாரூர் நகராட்சியில் பொறியாளராகவும், 14.03.2019 முதல் நகராட்சி பொறியாளர் மயிலாடுதுறை (பொறுப்பு) திருவாரூர் நகராட்சியாகவும் A5) திரு.M.காந்திராஜ், த/பெ. S.முத்தையன் என்பவர் திருவாரூர் நகராட்சி ஆணையராக 10.03.2017 முதல் 31.08.2018 வரையிலும், A6) திரு.வெங்கடேசன் என்பவர் திருவாரூர் நகராட்சியில் கடந்த 2013 முதல் 2016 வரை பணி களமேற்பார்வையாளராகவும், தற்போது சென்னை, தாமபரம் நகராட்சியில் பணிகள மேற்பார்வையாளராகவும், A7) திரு.நாகராஜன், திருவாரூர் நகராட்சியில் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் 31.03.2020 வரை பணி களமேற்பார்வையாளராகவும், தற்போது திருச்சி மாவட்டம், குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் பணி களமேற்பார்வையாளராகவும் பணிபுரிந்துள்ளனர். ஆகவே மேற்படி நபர்கள் ஊழல் தடுப்புச் சட்டம் 1988, சட்டப்பிரிவு 2(c)-இன் படி பொதுஊழியர் ஆவார்கள்.

A8) திரு.D.முருகவேல், ஒப்பந்ததாரர், 166 ஹரேராம் நகர், திருவள்ளூர், சென்னை என்பவர் மேற்படி திருவாரூர் புதிய பேருந்து நிலையம் நிலைய கட்டுமான பணி தொடர்பாக ஒப்பந்தம் பெற்று திருவாரூர் நகராட்சியில் Roc.No.2272/2012/E1 நாள் 06.03.2013-ன் படி பணி ஆணை பெற்று கட்டுமான பணி மேற்கொண்ட தனிநபர் ஆவார்.

திருவாரூர் நகரில் அரசு போக்குவரத்து பணிமனைக்கு அருகே அமைந்திருந்த பழைய பேருந்து நிலையத்தில் அனைத்து பேருந்துகளும் நிற்பதற்கு போதிய இடவசதி இல்லாத நிலையில், திருவாரூர் நகரில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாலும், திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நாகூர்-மைசூர் (NH-67) சாலைக்கு அருகே விளமல்-தியாகபெருமாநல்லூர் தெரு மற்றும் விளமல் - தியாகபெருமாநல்லூர் பண்ணை தெரு ஆகிய இடங்களில் 11.89 ஏக்கர் நிலம் திருவாரூர் நகராட்சி தீர்மானம் எண் 3442 நாள் 28.09.2006 இன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசு அனுமதியுடன் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

திருவாரூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 1437 நாள் 19.01.2010 இன் படி புதிய பேருந்து நிலைய கட்டுமானம் குறித்து பிரேரணை தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டதன் அடிப்படையில் கடந்த 31.01.2011 அன்று நாகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.34-ல் நிதிபங்களிப்பு அனுமதியளித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | நிதி பங்களிப்பு விவரம் | தொகை (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 | 2010, 2011-ஆம் ஆண்டிற்கான உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்ட மானியம் | 154.00 |
| 2 | 2011-2012 ஆம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்ட மானியம் | 246.00 |
| 3 | தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் கடன் | 140.00 |
| 4 | நகராட்சியின் பொது நிதி | 60.00 |
| | மொத்தம் | 600.00 |

அதனை தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தின் தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை கடித எண் ந.க.10860/வஆ1/தி.பு.பே.மி/2011 நாள் 01.03.2011-இன்படி ரூ.600,00,000/- மதிப்பிற்கு தொழில்நுட்பஅனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17.12.2012 அன்று திருவாரூர் நகர்மன்றத்தில் நகர்மன்ற தலைவர் திரு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 01.03.2011ல் தொழில்நுட்ப அனுமதி அளித்த பின்னர் சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி தேர்தல்கள் நடைப்பெற்றதால் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் 2012-13 ஆம் நிதியாண்டில் உள்ள விலை விகிதப்படி ஏற்கனவே திட்டமிட்ட அதே பணிகளுக்கு ரூ.725 இலட்சத்திற்கு மறுமதிப்பீடு செய்யப்பட்டு திருவாரூர் நகர்மன்ற தீர்மனம் எண் 317 நாள் 18.07.2012,ன் படி ஒப்புதல் பெறப்பட்டு நிர்வாக அனுமதிக்காக 27.03.2012 இல் கடித எண் 7272/2012/இ1 இன்படி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ரூ.600 இலட்சங்களில் கூடுதலாக தேவைப்படும் ரூபாய் 125 இலட்சத்தை அரசு ஏற்க வாய்ப்பு இல்லாததாலும், திருவாரூர் நகராட்சியால் செலவளிக்க வாய்ப்பு இல்லாததாலும் ஏற்கனவே திருத்திய முன்மொழிவு அனுப்பப்பட்டு 5 மாதகாலம் ஆகிவிட்டதாலும், மேலும் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்க தாமதிக்க வேண்டாம் என்றும், வரைவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிமென்ட் சாலையை தார்சாலையாக மாற்றி அமைப்பதன் மூலம் கூடுதலாக செலவாகும் தொகையை சமாளிக்கலாம் என்றும், சிமென்ட் சாலையை தார்சாலையாக மாற்ற திருவாரூர் நகர்மன்ற தீர்மான எண் 430- நாள் 17.12.2012இன்படி முடிவு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டு தலைமை பொறியாளர் வெங்கடாச்சலம் அவர்களின் ஆணை Roc. No.50647/2012/DO3 நாள் 21.12.2012-இன் படி 12 நிபந்தனைகள் விதித்தும் புதிய பேருந்து நிலைய கட்டுமானபணிகள் ஆரம்பிக்க 37 வகை இனங்களுக்காக தொழில்நுட்ப ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ரூபாய் 6 கோடிக்கான கட்டுமான பணிகள் ஒப்பந்ததாரர் திரு.D.முருகவேல், 166 ஹரோம் நகர், திருவள்ளூர் என்பவருக்கு திருவாரூர் நகராட்சி அலுவலக Roc. No. 2272/2012/E1 நாள் 06.03.2013 ன் படி திருவாரூர் நகராட்சி ஆணையர் திரு.கலைச்செல்வன் என்பவரால் ஒப்பந்ததாரர் கோரிய ரூ.60562185.13/- மதிப்பிற்கு பணிஆணை நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தில் நகராட்சி பொறியாளர்களும், ஒப்பந்ததாரரும் கையொப்பமிட்டுள்ளனர். கடந்த 02.05.2013 முதல் புதிய பேருந்து நிலைய சுற்றுசுவருக்கான கம்பிகட்டும் வேலைகள் (Fabricating of steel) ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (M.B.No. 3/13-14 P.No. 1-100 Volume -1)

கடந்த 02.12.2015 அன்று திருவாரூர் நகராட்சியின் நகர்மன்ற தலைவர் திரு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 31.11.2011 நகராட்சி நிர்வாக ஆணையரால் அனுமதி வழங்கப்பட்ட 600,00,000/- ரூபாய்கான பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளதாகவும், மதிப்பீட்டை விட கூடுதலாக இரும்பு கம்பிகள் பயன்படுத்தியுள்ளதாகவும், மண் நிரப்பும் பணிக்கு குறிப்பிட்டதை விட அதிக தூரத்திலிருந்து மண் எடுத்துவருவதாலும் முதல் வரைவு திட்டத்தின் படி சிமென்ட் சாலைகள் அமைக்கும் பணியினை கட்டுமான பொருட்களின் விலை உயர்வால் தார் சாலையாக மாற்றி திட்டமிட்டும், தற்போது அந்த தார்சாலையும் அமைக்காமல் சாலை அமைக்கும் பணியை தவிர்த்து ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட தொகையினைவிட 10% கூடுதலாக ரூ.660,00,000/- திற்கு மதிப்பீடு தயார் செய்து திருவாரூர் நகர் மன்ற தீர்மானம் எண் 543 ன்படி நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டு EAR No. 378/2015-16 இன்படி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

முதல் திட்ட மதிப்பீட்டின் படி ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை அளிக்கப்பட்டு கடந்த 27.11.2015 அன்று பணி முடிக்கப்பட்டதாக குறிப்பிட்டும், ரூ.660,00,000/- இக்கான திருத்திய மதிப்பீடு அமைக்கப்பட்டுள்ளது .

இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்திற்கான கட்டுமானப்பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் கூடுதல் பணிகளுக்கு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதில் கட்டிட பகுதிகளுக்கு சிமென்ட் பூசுதல், அலுமினிய கதவுகள் பொறுத்துதல், நகரும் ஜன்னல் கதவுகள் பொறுத்துதல், வெண்டிலேட்டர் பொறுத்துதல், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை வரை சவுடுமண் நிரப்புதல், மேலும் அந்த சாலைக்கு இருமுறை தார்கலவை பூசுதல், இருமுறை கருங்கல் தார் கலவை நிரப்புதல் ஆகிய பணிகள் செய்யப்படவில்லை.

14.08.2018 அன்று அளிக்கப்பட்ட பணிமுடிந்ததற்கான ஆய்வறிக்கையில் சிலவகை பணிகள் செய்யபப்படாமல் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் திட்ட மதிப்பீட்டில் கீழ்கண்ட குறைப்பாடுகள் காணப்படுகிறது.

1. புதிய பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை வரை 200 மீட்டருக்கு சவுடு மண் நிரப்பும் வேலை செய்யப்படாமல் கட்டிட பகுதிகளுக்கு ஒப்பந்ததாரர் குறிப்பிட்டதைவிட கூடுதலாக ரூ.5,45,399/- செலவிட்டதாக போலியாக அளவு புத்தகம் எழுதப்பட்டுள்ளது. முன் அனுமதியும் பெறாமல் கூடுதலாக 440 க.மீ அமைக்கப்பட்டதாக ரூ.12,12,671/- செலவிடப்பட்டு கூடுதலாக ரூ.3,59,520/- ம், 57000 கி.கி கூடுதலாக பயன்படுத்தியதாக போலியாக அளவு புத்தகம் தயார் செய்யப்பட்டு (57000*60.20) ரூ.34,31,400/- ம், 1034 க.மீ-க்கு ரூ.31,53,104/- செலவிடப்பட்டதாக போலியாக அளவு புத்தகங்கள் எழுதி ரூ.19,44,840/- ம், 812.16 க.மீ-க்கு ரூ.24,98,529/- செலவு செய்யப்பட்டதாக போலியாக அளவு புத்தகத்தில் குறிப்பிட்டு ரூ.4.76.704/-ம் கையாடல் செய்யப்பட்டுள்ளது.

2. இருசக்கரவாகனம் நிறுத்துமிடம் அமைப்பது தொடர்பாக எந்த வேலையும் செய்யப்படவில்லை, அளவு புத்தகங்கள் முறையாக பராமரிக்கப்படாடல், போலியாக புனையப்பட்டுள்ளன. புதிய பேருந்துநிலைய கட்டட பகுதி மற்றும் நடைமேடை பகுதிகளுக்கு தரைதளத்தில் (Kotta Stone) கடப்பா கல் பதிக்கும் வேலைக்காக போலியாக அளவு புத்தகங்களில் குறிப்பிட்டும், கூடுதலாக ரூ.5,50,811/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. கழிவரை மற்றும் கட்டட பகுதிகள் தொடர்பான எவ்வித வேலைகளும் மேற்கொள்ளாமல் இதற்குண்டான தொகை ரூ.1,40,089/- எடுக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலைய கட்டட நகரும் கதவுகளுக்காக குறிப்பிட்ட வேலை எதுவும் செய்யாமல் ரூ. 210269/- எடுக்கப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது. முறையான முன்அனுமதி பெறாமல் கட்டட பகுதிகளுக்கு வெள்ளையடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தின் வடக்கு, தெற்கு, மேற்கு பகுதி சாலைகள் மற்றும் உட்புற பேருந்து நிறுத்துமிடங்கள் ஆகிய பகுதிகளுக்கு Granular Sub base (Quarry Dust and Jelly)அமைப்பதற்காக ரூ.55,86,995/- செலவிட்டதாக அளவு புத்தகத்தில்

போலியாக குறிப்பிட்டும், கூடுதலாக ரூ.18,07,188/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. பேருந்து நிலைய கட்டிட பகுதிகளுக்கு மின் உபகரணங்கள் மற்றும் மின் இணைப்பு மதிப்பிட்ட 37 வேலைகளில் 17 வேலைகள் செய்யப்படாமல் அதற்கான தொகை ரூ.7,81,843/- கையாடல் செய்யப்பட்ள்ளது. கழிவறை பகுதிகளுக்கான அலுமினிய கதவுகள் ஜன்னல் கதவுகள், வென்டிலேட்டர் அமைப்பதற்கு கூடுதலாக ரூ.4,68,000/- ஒதுக்கீடு செய்தும் அது தொடர்பாக எந்த வேலையும் செய்யப்படாமல் உள்ளது. கழிவறை பகுதிக்கு எவ்வித வேலையும் செய்யாமல் அதற்குண்டான தொகைகள் ரூ.59,722/- எடுக்கப்பட்டு கையடல் செய்யப்பட்டுள்ளது.

3. முதல் மதிப்பீட்டில் குறிப்பிட அளவுகள், அதற்கான தொகை ஆகியவற்றோடு கூடுதலான அளவுகள் மற்றும் தொகையில் வேலை செய்து முடிக்கப்பட்டதாகவும் அளவுப்புத்தகங்களில் குறிப்பிட்டும் அதனை ரூ.660,00,000/- திருத்திய மதிப்பீட்டில் குறிப்பிட்டும் 12.12.2015 அன்று திருவாரூர் நகராட்சி பணி மேற்பார்வையாளர் திரு.வெங்கடேசன், நகராட்சி பொறியாளர் திரு.தர்மலிங்கம் ஆகியோரால் 27.11.2015 அன்று தயார் செய்யப்பட்டு கையொப்பமிட்ட Work Slip ஐ நகராட்சி நிர்வாக அலுவலக வரைவு அலுவலர் மற்றும் தலைமை பொறியாளர் ஆகியோர்கள் 12.12.2015 அன்று EAR No. 378/2015-16 ன் படி அனுமதியளித்துள்ளனர். ஆனால் முடிந்ததாக குறிப்பிட்ட பணிகளின் அளவுகள் 14.08.2018 அன்று பணி மேற்பார்வையாளர் திரு.நாகராஜன் மற்றும் நகராட்சி பொறியாளர் திரு.ஜோதிமணி ஆகியோரால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட ஒப்பந்த பணி முடித்த அறிக்கையுடன் ஒப்பீடு செய்யும்போது மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகிறது.

4. மேலும் கூடுதலாக 118 க .மீ. க்கு மண் வெட்டி எடுத்ததாகவும் அதற்கு செலவு செய்ததாகவும் போலியாக குறிப்பிடப்பட்டு அதற்குண்டான தொகை ரூ.9582.55/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. மணல் நிரப்பி, சிமென்ட் பூச்சு வேலை முடித்த இடங்களுக்கு போலியாக வேலை செய்ததாக குறிப்பிட்டு ரூ. 65385.57/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையத்தை சுற்றி சாலை அமைக்கும் பணிமுடிப்பு அறிக்கையில் அளவு புத்தக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவீடுகள் போலியாக குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய போருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுச்சாலைவரை 200 மீட்டர் நீளத்திற்கு தார் சாலை அமைக்கும் பணி முடிக்காமல் சாலையின் பல இடங்களில் பள்ளம் ஏற்பட்டு போக்கவரத்திற்கு பயன்படாத வகையில் அமைத்து ரூ.4,00,43,505.91/- செலவு செய்யப்பட்டும், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டுவதற்கு மொத்தம் ரூ.55,73,459/- செலவு செய்யப்பட்டும் இதில் பெருமளவு தொகை கையாடல் செய்யப்பட்டு அரசுக்கு இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருவாரூர் புதிய பேருந்து நிலை கட்டுமான பணிகள் 02.05.2013 முதல் 2018 இறுதிவரை நடைப்பெற்றுள்ளது. முதல் திட்ட மதிப்பீட்டில் அனைத்து வேலைகளுக்கும் ரூ.660,00,000/- நிதி ஒதுக்கப்பட்டும் இதற்குரிய வேலைகளை செய்யாமல் மீண்டும் இதே

பணிகளுக்கு ரூ.426,00,000/- ஒதுக்கியும், அதிலும் பணிகளை முடிக்காமல் மீண்டும் 9 திட்ட மதிப்பீடுகளாக ரூ.181,10,000/- நிதி ஒதுக்கி முறைகேடாக செலவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி எதிரிகள் A1 முதல் A7 வரையிலான பொது ஊழியர்கள், தனிநபரான ஒப்பந்ததாரர் எதிரி A8 முறையாக கட்டுமானப்பணிகளுக்கான டென்டர் விதிமுறைகளை பின்பற்றாமலும், தரமான கட்டுமான பொருட்களை பயன்படுத்தாமலும், போலியாக அளவு புத்தகங்கள் தயார் செய்தும், புதிய பேருந்து நிலைய மேற்கூரை சிமெண்ட் பூச்சுகள் பெயர்ந்தும், கட்டுமான கம்பிகள் வெளியில் தெரியகூடிய நிலையிலும், தரைதளங்கள் உள்வாங்கியும், தார்சாலையில் பள்ளங்கள் ஏற்பட்டும் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத அளவில் ஆபத்தான வகையிலும் எதிரிகள் அனைவரும் கூட்டுசதி செய்து, நேர்மையற்ற வகையில் குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்தும், அரசை ஏமாற்றி, ஒப்பந்த வேலைகள் ஒப்பந்தத்தில் உள்ளவாறு நடைபெறாமல் உள்ள போதிலும், பணிகள் நடைப்பெற்றது போன்று தவறாக ஆவணங்களை தயார் செய்தும் அதன் மூலம் எதிரிகள் அநியாய லாபம் அடைய வழிவகை செய்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளனர் என்பது தெரியவருவதால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகளின் செய்கை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மேலே கண்ட குற்ற அலுவலர்களின் செயல் தொடர்பாக Prevention of Corruption Amendment Act 2018, Sec 17(A)-இன் படி நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கள் துறை கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் கடிதம் எண் Letter (D) No.343, dated 15.10.2020-யின் படி உரிய துறை அனுமதி பெற்றும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனர் அவர்களின் நமுனா எண் VR.No.47837/2019/LB/TVR நாள் 29.10.2020-ல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதலின் படியும், இயக்குனர் அவர்களின் நமுனா எண் VR.No.47837/2019/LB/TVR நாள் 10.02.2021-ல் குறிப்பிட்ட அறிவுரைகளின் படியும் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2021 சட்ட பிரிவுகள் 120(B), 409, 420, 465, 468, 471 IPC மற்றும் 13(2) r/w 13(1)(c), 13(1)(d) of PC Act 1988 as amended 2018 and 109 IPC இன் படி இன்று 08.04.2021 ஆம் தேதி 15.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலினை, தலைமை நீதித்துறை நடுவர் திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும், நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

(signature) 08/4/21

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.

ம

முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.7ன் எதிரிகள் விபரம்

A1) திரு. R.தர்மலிங்கம், த/பெ ராமசாமி, முன்னாள் நகராட்சி பொறியாளர் (பொறுப்பு) முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A2) திருமதி.K.உமாமகேஸ்வரி, க/பெ. கண்ணன், முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A3) திரு V.பாலகங்காதரன், த/பெ. வைத்தியநாதன், முன்னாள் நகராட்சி பொறியாளர் (பொறுப்பு) முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A4) திரு P.ஜோதிமணி, த/பெ. பிச்சைப்பிள்ளை, முன்னாள் நகராட்சி பொறியாளர், திருவாரூர்.

A5) திரு.M. காந்திராஜ், த/பெ. S.முத்தையன், முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A6) திரு.வெங்கடேசன், பணி கள மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், திருவாரூர்.

A7) திரு.நாகராஜன், பணி கள மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், திருவாரூர்.

A8) திரு.D.முருகவேல், ஒப்பந்ததாரர், 166 ஹரேராம் நகர், திருவள்ளூர், சென்னை.

8/A/21

துணை காவல் கண்காணிப்பாளர்,
லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.